**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C.187/2021**

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness** | | **Prosecution** | **: P.W-7 LW-8** |
| Name | : நடராஜன் SI Rtd. | Defence | : |
| Father Name | : வேலாயுதம் | Court | :JM Court, Sirkali |
| Village | : செம்பனார் கோயில் | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 62/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **25.02.2025.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொறையார் காவல் நிலையத்தில் பணி ஓய்வு பெற்று செம்பனார் கோயிலில் வசித்து வருகிறேன். 26.12.2020 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் குமார் என்பவர் சீர்காழி காவல் நிலைய குற்ற எண் 1560/2020 U/s.294(b), 323, 506(2) IPC கீழ் வழக்கு பதிவு செய்து என் பார்வைக்கு வைத்ததை எனது விசாணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்றோம். சாட்சிகள் முத்துராமன், மரியதாஸ், ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடத்தை 14.30 மணிக்கு பார்வை செய்தோம். பார்வை மகசர் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு **மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர்** தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.4 மற்றும் அசாஆ.5 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. சம்பவ சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது. சம்பவத்தில் காயம்பட்ட சாட்சிகள் மாரியம்மாவை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். சம்பவ சாட்சிகளான கண்ணையன், வேலு ஆகியோர்களை தனித்தனியே வாக்குமூலம் பெற்று பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் 26.12.2020 ந்தேதி எதிரி இளங்கோவன், மணிமாறன் இருவரையும் சட்டநாதபுரம் ரவுன்டானா அருகில் 15.30 மணிக்கு இவ்வழக்கின் காரணம் கூறி எதிரிகளை கைது செய்தோம். எதிரியை 16.00

மணிக்கு நிலையம் கொண்டுவந்தோம். இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பூபேஷ்தர்மேந்தரா மற்றும் வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் குமார் ஆகியோரையும் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அசா.5 மூலம் ஏற்கனவே அசாஆ.2 ஆக குறியீடு** செய்யப்பட்டுள்ளது. எதிரிகளை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. பின் மேற்படி எதிரிகள் மணிமாறன் மற்றும் இளங்கோவன் இருவரையும் நீதிமன்ற வழி காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இவ்வழக்கின் மற்ற எதிரிகள் இருவரும் நாகப்பட்டினம் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை வாங்கியதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது எதிரிகள் A1 மற்றும் A2 மீது U/s.294(b), 323, 506(2) IPC படியும் எதிரிகள் A3, A4 மீது U/s.294(b), 323, IPC ன்படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரிகள் 2 மற்றும் 4 தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை உள்ள நபர்களை 26.12.2020 ந்தேதி விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த முன்விரோதம் என்ன என்பது எனது விசாரணையில் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இருவருக்கும் இடையே இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த இடப்பிரச்சனை சம்பந்தமாக புகார் தாரர் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் புகார் தாரரின் கணவரை சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக இந்த வழக்கில் புகார் தாரரின் கணவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர் ஊரில் இல்லாததால் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை. புகார் தாரரை மருத்துவமனையில் கொண்டு சேர்த்தது அவரது கணவர் என்றால் சரிதான். மருத்துவரை நான் விசாரித்த போது

புகார்தாரருக்கு வலி இருப்பதாக கூறினார் வெளிக்காயம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும்என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது சண்முகநாதன் மாடிவீட்டு வாசல் என்றால் சரிதான். நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள எந்த ஒரு நபரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கபடவில்லை என்றால் சரிதான் ஆனால் அவர்கள் சாட்சிசொல்ல முன்வரவில்லை. என்ன காரணத்திற்காக அவர்கள் சாட்சி சொல்ல முன்வரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையிலேயே புகார் தாரர் கூறுவது போல் சம்பவம் நடந்திருந்தால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் சாட்சி சொல்வார்கள் சம்பவம் உண்மை இல்லை என்பதால் தான் யாரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் சென்று சரியாக விசாரணை செய்திருந்தால் புகார் தாரர் கொடுத்த புகார் பொய்யானது என்றும் நான் சம்பவ இடம் செல்லாமல் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பார்வை மகசர் ஆவணமானது கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். இந்த வழக்கில் தடய பொருட்களாக எந்த ஒரு ஆயுதமும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரிதான். சீர்காழீ காவல் நிலையத்தில் புகார் தாரரின் மாமியார் அலமேலு என்பவர் புகார் தாரரின் கணவர் சண்முகநாதன் மீது சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரின் அடிப்படையில் அவர் மீது குற்ற எண் 1558/2020 பிரிவுகள் 294(b), 352, 506(2) கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் புகார் தாரரின் கணவர் கைது செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கின் குற்ற எண் 1560/2020 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் கடந்த 05.12.2020 ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவம் நடந்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தது 13.02.2021 என்றால் சரிதான். புகார் தாரர் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை புகார்

தாரரின் மாமியார் அலமேலு கொடுத்த புகாரில் இருந்து தனது கணவரை காப்பாற்ற வேண்டி எதிரிகள் மீது பொய்யாக கொடுக்கபட்ட பொய்புகாரை சரியாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் புகார் தாரர் கொடுத்த பொய்புகார் என்றால் சரியல்ல. புகார் தாரர் சொல்வது போல் எந்தஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**எதிரிகள் A1 மற்றும் A3 சார்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**